மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT
No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 02 | குரல்: 126 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஞாயிற்றுக்கிழமை 07.01.2024 | பக்கங்கள் 10

# ஈழத்தமிழ் அரசியல் பிரதிநிதிகளிடம் தலைவர் வே.பிரபாகரனை நினைவு கூர்ந்த பிரேமலதா!



பக்கம் 8



# இந்து மதமே மிகவும் பழமை வாய்ந்த மதம்! ஒப்புக் கொள்கிறோம்

## என்கிறார் ரணில்!

# வடக்கில் நல்லூரை விட மிகப்பெரிய ஆலயம் ஒன்றைக் கட்டுங்கள்!

## பச்சைக் கொடி காட்டிய ரணில்!

பக்கம் 7

# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## யார் கட்டுப்பாட்டாளர்?

வடக்கு கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமாக தமிழர்களின் விகிதாசாரத்தினைக் குறைத்து அவர்களுடைய பூர்வீக உரிமை, அரசியல் அதிகாரங்களை இல்லாமல் செய்வதற்கான வேலைத்திட்டங்களையே காலாகாலமாக சிங்களம் செய்து வருகிறது.

அதன் தொடர்ச்சியே தற்போதும் வடக்கு கிழக்கின் தமிழர் பகுதிகளில் அமைக்கப்பட்டுவரும் புத்த விகாரைகளும் புத்தர் சிலை நிறுவல்களுமாகும். தொல்பொருள் பாதுகாப்பு என்ற போர்வையில் நடைபெற்றுவரும் தமிழர்களது வரலாற்றிடங்களின் கையகப்படுத்தல்கள் யாருடைய கட்டளைக்கும் நிறுத்தப்படப் போவதில்லை.

வடக்கில் ஜனாதிபதி தமிழ் மக்களின் தேவை குறித்தும் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் பற்றியும் பேசிக்கொண்டிருக்கையில் கிழக்கில் புத்தர் சிலை நிறுவும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இது வடக்குக் கிழக்கில் பௌத்த மயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கமையவே நடைபெற்று வருகின்றன என்பதனை உறுதி செய்கின்றன.

வெளிப்பூச்சுக்கு பூசி மெழுகல்கள் நடைபெற்றாலும் உள்ளே நடப்பவைகள் எல்லாம் திட்டமிட்டபடி நடந்துகொண்டே இருக்கின்றன என்பதற்கு இது நல்லதொரு உதாரணமாகும்.

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், காணாமல் போனோரின் உறவினர்களின் போராட்டத்தக்குத் தீர்வு. வடக்கு கிழக்கின் காணி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் என பல சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கையில் உச்சியை மாத்திரம் குளிரவைக்கும் செயற்பாட்டைப் போன்று ஒன்றைச் செய்து தமிழர்களை ஏமாற்றிவிடலாம் என்ற நிலைமை ஒன்று காணப்படுவதை உணர முடிகிறது.

அத்துமீறிய தமிழ்ப் பிரதேசங்களின் மீதான சிங்களவர்களின் ஆக்கிரமிப்புகளுக்கு முடிவு கட்டாமல் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் எந்த ஒரு நடவடிக்கையும் பயனற்றதே. வடக்கு கிழக்கு மக்களின் பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சினைகள் தீர்வுகாணப்படாமலேயே இழுத்தடிப்புச் செய்யப்பட்டவண்ணம் இருந்து வருகின்றன. அவற்றுக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கான வழிவகைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

வடக்கு கிழக்கின் பௌத்த மயமாக்கல் நிகழ்சி நிரலின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி பிரதேசத்தில் இலுகஸ்பைக்குளம் பிரதேசத்தல் பொரலுகந்தை ரஜமகா விகாரை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வேளை ஏற்பட்ட மக்கள் எதிர்ப்பையடுத்து கிழக்கு ஆளுநரால் தடை விதிக்கப்பட்டது.

இதே நேரம் மூதூர் 64ஆம் கட்டை ராஜவந்தால் மலையில் தொல்பொருள் திணைக்களத்தினரின் அனுசரணையுடன் புத்தர் சிலை நிறுவப்பட்டு விகாரை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தொல்லியல் பிரதேசமாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் எந்தவிதமான கட்டுமாணப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டக் கூடாது என்றாலும், தொல் பொருள் தரப்பினரின் அனுசரணை, ஒத்துழைப்புடன் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுவது சிறப்பானதல்ல.

பௌத்த மதம் ஆட்சி செலுத்துகின்றன இலங்கையில் சிங்களப் பௌத்தமே இருந்து வந்தது என்பதனை நிறுவுவதற்கான வேலைகளை பேரினவாதத் தரப்பினர் மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலையில் ஆட்சி பீடத்தினால் கூட இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஒன்றே காணப்படுகிறது. இது போன்ற நிலைமை தொடர்ந்தமையினாலேயே 30 வருடங்களுக்கு மேலான யுத்தம், அழிவுகள், இன்னல்கள், இழப்புகள் ஏற்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் உருவாகியிருந்தன.

நாட்டில் ஒரே சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக சொல்லப்பட்டாலும், தமிழ் மக்களுக்கு ஒருவிதமாகவும், சிங்களவர்களுக்கு அவர்களுக்கு சாதகமாகவுமே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனை வடக்கு கிழக்கில் நடைபெறும் சம்பவங்களின் போது அவற்றினை உணர முடியும். உதாரணம் மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல்தரை விவகாரம்.

இவ்வாறான நிலைமை தொடர்கின்றமையானது மேலும் மக்கள் மத்தியில் முரண்பாடுகள் வளர்வதற்கே வழிவகுக்கும். இதற்கு யார் பொறுப்பு, கட்டுப்பாட்டாளர் யார் என்பதே வினா?


## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.
அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :
No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339

# “இணையிலான் 2” நூல் சிட்னியில் வெளியீடு!




ஈழத்தின் தொன்மையான வரலாற்றை சொல்லும் சரித்திரப் புனை நாவலான, ‘இணுவிலான்’ சிகாகோ பாஸ்கர் எழுதிய “இணையிலான்” இரண்டாவது பாகம் சிட்னியில் வெளி வருகின்றது.ஜனவரி மாதம் எதிர்வரும் 20ம் திகதி சனிக்கிழமை வென்றவேத்வில் சமூக நிலையத்தில் (Wentworthville Community Centre> Wentworthville> Sydney) மாலை 1530 மணிக்கு இணுவில் ஒன்றிய ஆதரவுடன் வெளியிடப்பட உள்ளது.

**இணுவிலானின் இணையிலான் :**

ஈழத்தின் வரலாற்றுப் பின்னணியில் புதைந்து கிடக்கும் சரித்திரத்தை அயராது அலசி தம் நூலில், அழுத்தமான அடித்தளத்தை பதிவு செய்திருக்கிறார் ‘இணுவிலான்’ எனப்படும் சிகாகோ பாஸ்கர்.

இலங்கையைக் கைப்பற்றி 1508 முதல் 1658 வரை ஆண்ட போர்த்துக்கீசர் வரலாறோடு நிறைவான “இணையிலான் 2”நூலின் தொடர்ச்சியாக, அடுத்த வரலாற்று நாவல் “இணையிலான் 2“ தற்போது வெளிவருகிறது. இலங்கையைக் கைப்பற்றி 1658 ம் ஆண்டு முதல் 1796 வரை ஆண்ட ஒல்லாந்தர்(டச்) மற்றும் 1796/1815 ம் ஆண்டு முதல் 1948 வரை இலங்கையை ஆட்சி செய்த ஆங்கிலேயர் காலத்தில் அன்னியரை எதிர்த்துப் போரிட்ட பண்டார வன்னியனின் வரலாற்றைத் தழுவி வரும் “இணையிலான்” இரண்டாவது பாகம் ஈழத்தின் தொன்மையான வரலாற்றை சொல்லும் நூலாகும்.ஈழத்தின் ஆழத்தை காண முயன்ற இந்த முயற்சியில் நூலாசிரியர், வணங்கா மண்ணான வன்னி மண்ணில் அடங்கா தமிழனாக விளங்கிய மாவீரன் பண்டார வன்னியன் பற்றிய வரலாற்றுத் தகவல்களை அள்ளித் தந்துள்ளார்.போர்த்துக்கீசர் அன்று செய்த மத மாற்றமும், அதன் பின் விளைவுகளும், ஆலயங்களின் அழிவும், மக்களின் அவல நிலையை ஆழ்ந்து, ஆராய்ந்து ஒரு சரித்திர கதையை தீட்டி பிரமிக்க வைத்துள்ளார் நூலாசிரியர் ‘இணுவிலான்’ சிகாகோ பாஸ்கர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாண இராச்சியத்தை தமிழ் மன்னர்கள் ஆண்டு இருக்கிறார்கள் என்பதை பல சான்றுகளுடன் கதையில் சொல்லி, கடலில் மூழ்கி எழுந்து முத்தெடுத்ததுப் போல் இணையிலான் புனை நாவலை இனிதாக உருவாக்கி இருக்கிறார் நூலாசிரியர்.எங்கள் சொந்த தாய் மண்ணின் வரலாற்றை அறிய ஆவலாய் இருக்கும் வாசகர்களுக்கு “இணையிலான்” இரண்டாவது பாகம் விரைவில் வருகின்றமை அரிய வரப்பிரசாதமாகும்.நூலாசிரியர் ‘இணுவிலான்’ சிகாகோ பாஸகர் பிறந்த மண்ணை விட்டு பிரிந்து பல ஆண்டுகள் ஆனாலும் தமிழ் மீதும், மண் மீதும் கொண்ட தீராக்காதலால் மட்டுமே இப்படியொரு வரலாற்று நாவலை படைக்க முடிந்ததுள்ளது.

*-ஐங்கரன் விக்கினேஸ்வரா-*

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp
+94 76 567 3339

# கிழக்கில் ஜல்லிக்கட்டு விளையாட்டினை நடாத்துவது தமிழர்களின் கலாசார அழிவுக்கு வித்திடும்!

## அருட்தந்தை மா.சத்திவேல்



ஜனாதிபதி புகைப்படம் எடுப்பதும், கிழக்கு மாகாண ஆளுநர் ஜல்லிக்கட்டு விளையாட்டினை நடாத்துவதும் அரசியல் ரீதியான தமிழர்களின் கலாச்சார அழிவுக்கு வித்திடும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.வடகிழக்கு தமிழர்களுக்கு எதிரான பாரிய இன அழிப்பு போரை முன்னெடுத்து இனப்படுகொலையோடு ஆயுத யுத்தத்தை மௌனிக்க செய்த இனவாத ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்தத்தை முன்னிறுத்தியும் அபிவிருத்தி எனும் போர்வையிலும் தமிழர் தாயகத்தின் நிலங்களை ஆக்கிரமித்து கொண்டு இனத்துவ அடையாளங்களில் ஒன்றான கலாச்சார மற்றும் பண்பாட்டை அழிக்கும் செயலையும் தீவிர படுத்தியிருக்கும் நிலையில் ஜனாதிபதி இந்தியாவின் பிரபல்ய ஊடகம் ஒன்று நடத்திய பாட்டு போட்டியில் வெற்றியாளருக்கு பாராட்டு தெரிவித்து புகைப்படம் எடுப்பதும், கிழக்கு மாகாண ஆளுநர் பொங்கல் விழா எனும் போர்வையில் ஜல்லிக்கட்டு விளையாட்டு அறிமுகப்படுத்துவதும் அரசியல் ரீதியான தமிழர்களின் கலாச்சார பண்பாட்டு அழிவுக்கு வித்திடும் செயலாகும். இதனை சிவில் சமூக மற்றும் அரசியல் அமைப்புகள் வன்மையாக கண்டிப்பதோடு தொடர்ந்து இதற்கு இடம் அளிக்கவும் கூடாது. இல்லையேல் வீட்டுக்குள் புற்றாக அது வளர்ந்து விடும்.தென்னிந்திய திரைப்படங்கள் வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு இலங்கையில் திரையிடப்பட்ட காலம் போய் தென்னிந்திய தொலைக்காட்சி அலைவரிசைகள் நாள் முழுவதும் பல திரைப்படங்களை காட்சிப்படுத்துவதோடு அதனோடு ஒட்டிய கலாச்சாரத்தை ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் மையம் கொள்ளும் அளவுக்கு விரிவுபடுத்தி உள்ளன. வடகிழக்கும், மலையகமும் இதனால் இந்தியாவின் இன்னொரு மாநிலமாக தோன்றியது என சிந்திக்க வைத்துள்ளது.அதற்கு மத்தியில் தென்னிந்திய தொலைக்காட்சி அலைவரிசை நடத்தும் பாடல் போட்டி பள்ளி செல்லும் மாணவர்களை தம் வசம் ஈர்த்துள்ளதோடு அவர்கள் திரையிசை பாடல்களை மந்திரங்களாக முணுமுணுக்கவும் வைத்துள்ளது. அவர்களின் கல்வியை அழிக்கும் செயலை ஏற்க முடியாது. அண்மையில் அவ் அலைவரிசை நடாத்திய பாடல் போட்டியில் பங்கு பற்றிய வடக்கு மாகாண மாணவி வெற்றி பெற்றதோடு, மலையக மாணவி ஒருவர் சமூக மட்டத்தில் புகழை அடைந்துள்ளார். தனிப்பட்ட ரீதியில் அவர்களின் வெற்றி பாராட்டுக்குரியது. ஆனால் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தில் கதைக்கும் அளவிலும், ஜனாதிபதி பாராட்டு தெரிவித்து புகைப்படம் எடுக்கும் அளவிலும் அது மக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. திரைப்பட கலாச்சாரத்துக்குள் மக்களையும் இளம் சந்ததியினரையும் தள்ளி இன அழிப்புக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற சமூகத்தின் இன்னுமொரு அடையாள கூறான கலாச்சார பண்பாட்டு அழிவையும் தீவிர படுத்தும் செயலாகும். கல்வியை சீரழிக்கும் போதை செயலுமாகும். இது தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

அதன் இன்னும் ஒரு செயல் திட்டமாகவே கிழக்கு மாகாண ஆளுநர் தமிழர் கலாச்சாரம் என இதுவரை காலமும் இந்தியாவின் தமிழகத்தில் பொங்கல் வீர விளையாட்டாக இருந்த ஜல்லிக்கட்டினை இறக்குமதி செய்துள்ளார். இதில் விளையாட்டுக்கு அப்பால் அரசியலும் உள்ளது என்பது உண்மை.மேய்ச்சல் தரை போராட்டத்திற்கு முடிவு கட்டி கால்நடை பணியாளர்களை பாதுகாக்க முடியாதவர்கள் வடகிழக்கு மற்றும் மலையக தமிழர்களின் பண்பாட்டை காக்க வழிசமைக்காதவர்கள் ஜல்லிக்கட்டு போட்டி நிகழ்த்துவது யாரை திருப்திப் படுத்துவதற்காக? இதன் அடுத்த கட்டம் தமிழ் மற்றும் சிங்கள மாடுகள் மோதும் நிலையும் உருவாக்கலாம்.அனேக மக்கள் தம்மை மலையக தமிழர்கள் என இன ரீதியாக அடையாளப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்னெடுக்கும் போது அவர்களை இந்திய வம்சாவளி தமிழர்கள் என்று தொடர்ந்து அடையாளப்படுத்தும் தொண்டமான் குழுவினர் வடகரத்திலும் மலையகத்திலும் இந்த திட்டத்தை விரிவு படுத்தும் செயலை மௌனமாக அங்கீகரித்து தற்போது பண்பாட்டு அழிவை முன்னெடுக்க பொங்கல் விழாவை பயன்படுத்துவது வெட்கக்கேடான செயல் ஆகும். அத்தோடு இதன் மூலம் தான் பேரினவாதிகளின் கைக்கூலி என்பதையும் அடையாளப்படுத்தியுள்ளனர். இதனை தமிழர்கள் வன்மையாக கண்டிப்பதோடு சிவில் சமூக அமைப்புக்கள் பண்பாடு காப்பதற்கு அமைப்பாக செயல்படாவிடின் பாரிய அழிவுக்கு முகம் கொடுக்கும் நிலை உருவாகும் என தெரிவித்தார்.

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**

**தொலைபேசி :**

**+94 76 567 3339**



# பொலிசாரின் அடாவடித் தனத்தினை கண்டித்து கண்டன போராட்டம்!




சண்முகம் தவசீலன்

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவியினை பொலிசார் கைது செய்துள்ள நிலையில் பொலிசாரின் அடாவடித்தனத் தினை கண்டித்து எதிர்வரும் 08.01.2024 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பாரிய ஒரு போராட்டத்தினை மேற்கொள்ளவுள்ள தாகவும் அதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பொதுக்கூட்டமும் நடை பெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி தெரிவித்துள் ளார். நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார் எதிர்வரும் திங்கட்கிழமை (08.01.2024) முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுக ளின் பொதுக்கூட்ட ம் காலை 11 மணிக்கு வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளு மாறு அழைப்பு விடுத்துள்ளார் எங்களுக்கான முடிவுகளை எடுக்க வேண்டும். அரசாங்கத்தின் பல நெருக்கடிக்கடிக்கு மத்தியில் நாங்கள் இருக்கி றோம் அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்ட உறவுக ளின் உறவுகளை இல்லாமல் செய்வதற்கு பல வழிகளில் முனைகின்றார்கள். இதனை தடுத்து நிறுத்த வேண்டுமாக இருந்தால் எங்களுக்கான முடிவுகளை நாங்கள் எடுக்கவேண்டும் இவ்வா றான நிலையில் நாங்கள் ஒன்று கூடுவதற்கு இடங்கள் கேட்டால் இடத்தை தருபவர்களை புலனாய்வுத்துறையினர் அச்சுறுத்துகின்றனர் இடம் கொடுக்காதீர்கள் சாப்பாடு கொடுக்காதீர்கள் என்று இந்த நிலையில் நாங்கள் யாரிடமும் இடம் கேட்க போகாமல் நாங்களே முடிவெடுத்து எங்களுக்கான இடத்தினை நாங்கள் தெரிவு செய்துள்ளோம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது அவரின் முன்னால் தான் எங்கள் உறவுளை நாங்கள் கொடுத்தோம். அம்மாள் ஆச்சியின் சாட்சியாக நாங்கள் அந்த இடத்தில் பொதுக்கூட்டம் ஒன்றினை கூட உள்ளோம் இதில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார் இதேவேளை எதிர்வரும் 08.01.2024 காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத் திற்கு முன்பாக பாரிய ஒருபோராட்டத்தினையும் முன்னெடுக்கவுள்ளோம் வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவியினை பொலிசார் கைதுசெய்துள்ள நிலையில் தொடரும் பொலிசாரின் அடாவடித் தனத்தினை கண்டித்து இந்த போராட்டத்தினை நடத்தவுள்ளோம் வலிந்து காணாமல் ஆக்கப்பட் டவர்களின் உறவுகளை பொலிசார் அடக்குவதை யும் நிறுத்த வேண்டும் என்று இந்த போராட்டம் முன்னெடுக்கவுள்ளோம் இதில் தேசியத்திற்காக பயணிப்பவர்கள்,அரசியல் பிரதிநிதிகள், அமைப் புக்கள் என அனைவரும் அணிதிரண்டு ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்

# ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவில் இரு தமிழ் இளைஞர்கள் நியமனம்!

ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவுக்கு வடக்கை சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் நியமனம் ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட பிரதான அமைப்பாளரும், ஐக்கிய இளைஞர் சக்தியின் உப தலைவருமாகிய லக்ஷயன் முத்துக்குமாரசாமியும், வவுனியா மாவட்ட அமைப்பாளர் நிரோஸ்குமார் சாந்திகுமார் ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவில் வடக்கு மாகாணத்தை பிரதிநித்தபடுத்தும் உறுப்பினர்களாக எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசா அவர்களால் நேற்று நியமிக்கப்பட்டனர். லக்ஷயன் மற்றும் நிரோஸ்குமார் ஆகியோர் எதிர்கட்சித்தலைவர் அவர்களின் முறையே முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஒருங்கிணைப்பு செயலாளர்களாக கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது .





# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கி வைப்பு.




மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடற்சியாக பெய்துவந்த அடைமழையினால் பாதிப்புற்ற போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள பெரியபோரதீவு மற்றும் பட்டாபுரம் கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வெள்ளிக்கிழமை பட்டாபுரம் கிராம சேவையாளர் காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

பூமணிம்மா அறக்கட்டளை அமைப்பின் ஊடாக பிரான்ஸ் நாட்டிலுள்ள மரியதாஸ் ஜெயந்தனின் பத்து இலட்சம் ரூபாய் நிதிப் பங்களிப்பில் மூன்றாவது கட்டமாக இந்த நிவாரணம் மட்டக்களப்பு போரதீவுப் பற்றில் வழங்கி வைக்கப்பட்டது.

அப்பகுதி கிராமசேவை உத்தியோகஸ்த்தர் ஜே.முத்துலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் எஸ்.இரங்கநாதன், பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.சசிகுமார், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஆ.வேலாயுதம் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

வடகீழ் பருவப் பெயற்சி மழை தற்போது சற்று ஓய்ந்துள்ள நிலையிலும் மக்கள் குடியிருப்புக்களில் தொடர்ந்து வெள்ள நிலமையே காணப்படுகின்றது. இந்த இக்கட்டான காலநிலையில் காலடிக்குத் தேடிவந்து உதவிய பூமணிம்மா அறக்கட்டளை அமைப்பு, பிரான்ஸ் நாட்டிலுள்ள மரியதாஸ் ஜெயந்தன், மற்றும் சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ் மற்றும் பூமணிஅம்மா அறக்கட்டளையின் -நிறுவனத் தலைவர் விசு செல்வராஜாவுக்கும், அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளுக்கும் இலங்கை ஆகிய அப்பகுதி மக்கள் தமது உளமார்ந்த நன்றியை இதன்போது தெரிவித்தனர். பூமணி அம்மா அறக்கட்டளையினர். புது வருடத்திலிருந்து தொடர்ச்சியாக தினமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று மலையகம் உட்பட அனைத்து பகுதிகளுக்கும் உலர் உணவுகளை வழங்கி வருகின்றனர்.

# கிழக்கு மாகாண அஞ்சல் கட்டட தொகுதி மட்டக்களப்பில் திறந்து வைப்பு!

கிழக்கு மாகாண அஞ்சல் நிர்வாக கட்டட தொகுதியானது மட்டக்களப்பில் கௌரவ போக்வரத்து, நெடுந்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. பாரம்பரிய நடனம் இசை முழங்க அதிதிகள் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றி நிகழ்வு இடம் பெற்றது. கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி எம்.எச்எம். அஸ்லம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு அபிவிருத்தி குழு தலைவருமான சிவனேசதுறை சந்திரகாந்தன், வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்து கொண்டனர். 2019ம் ஆண்டு அஞ்சல் திணைக்களத்தின் 448 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அஞ்சல் நிர்வாகத் கட்டடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு இன்று கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே. முரளிதான், வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பல்பிட, அஞ்சல் மா அதிபதி ருவன் சத்துமார மற்றும் பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





# இந்து மதமே மிகவும் பழமை வாய்ந்த மதம்! அதனை ஒப்புக் கொள்கிறோம் என்கிறார் ரணில்!



இந்து மதம் மிகவும் பழமை வாய்ந்த மதம் என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம் அதனை நாம் பாதுகாக்க வேண்டுமென சிறிலங்காவின் அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.சர்வமத தலைவர்களுடன் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பழைமை வாய்ந்த மதம் இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மற்றும் இந்த ஆகிய அனைத்து மதங்களும் ஒரு அமைச்சுக்கு கீழ் உள்ளது. இதனால் நாம் அமைச்சர்களின் எண்ணிக்கையை பாரியளவில் குறைத்துள்ளோம். எனினும், அனைத்து சமயங்களுக்குமான தனித்தனி ஆலோசனை சபைகள் அமைக்கப்பட வேண்டுமென நினைக்கிறேன்.இதன் மூலம், சமய நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி, குறித்த சபைகளின் தலைவர்களின் அனுமதியுடன் மேற் கொள்ள முடியும்.இந்து மதம் மிகவும் பழைமை வாய்ந்த மதம் என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். இலங்கையில் இந்து மதம் பாதுகாக்கப்படுவதையும் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

விகாரைகள் பாதுகாக்கப்படுவதை போல், கோவில்கள் இந்து கடவுள்களும் பாதுகாக்கப்படுகிறார்கள். ஆகையால் இங்கு சிங்களவர்கள் வந்து வழிபாடுகளை மேற்கொள்வதை யாரும் பிரச்சனையாக்கி கொள்ள கூடாதென நான் நினைக்கிறேன்.மத்திய கிழக்கு நாடுகளுடன் நாம் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். இதனால் இலங்கைக்குள் முஸ்லிம் மதம் வந்தது. நாம் எந்த மதத்தையும் கைவிடவில்லை. என குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு மதத்துக்கு அநீதி இழைக்கப்படுமாயின், அது தொடர்பில் எனக்கு தெரியப்படுத்துங்கள். அதற்கான உரிய நடவடிக்கைகளை நான் முன்னெடுப்பேன் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வடக்கில் நல்லூரை விட மிகப்பெரிய ஆலயம் ஒன்றை கட்டுங்கள்!

## பச்சைக்கொடி காட்டிய ரணில்!



வடக்கில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை விட மிகப்பெரிய ஆலயம் ஒன்றை அமைப்பதற்கான திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என சிறிலங்காவின் அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். சர்வமத தலைவர்களுடன் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.அத்துடன் இந்த ஆலயம் அமைக்கும் திட்டத்தில் அதிபராகிய நான் தலையிடமாட்டேன் எனவும் வடக்கிலுள்ள அரசியல்வாதிகள் எவரும் தலையிடமாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.முழு ஆதரவையும் வழங்குவேன் வடக்கில் உள்ள இந்து மதத் தலைவர்கள் மற்றும் நல்லூர் கோவிலின் பொறுப்பதிகாரிகள் இணைந்து இதற்கான திட்டங்களை சமர்ப்பித்தால் அதற்கான முழு ஆதரவையும் வழங்குவேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், வடக்கில் பல்கலைக்கழகங்களை அமைக்க நான் அனைவருக்கும் அனுமதி வழங்கவுள்ளேன். நீங்கள் யாரை கொண்டு வேண்டு மானாலும் இங்கு பல்கலைக்கழகங்களை அமைக்கலாம் எனவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசியல் பிரதிநிதிகளிடம் விடுதலைப்புலிகளின் தலைவரை நினைவு கூர்ந்த பிரேமலதா!



மறைந்த தே.மு.தி.க தலைவரும், தமிழ்த் திரை உலகின் முன்னணி நடிகருமான விஜயகாந்தின் இல்லத்திற்குச் சென்று தமிழ் பிரதிநிதிகள் அஞ்சலி செலுத்தியுள்ளனர். சென்னை கோயம்பேட்டில் அமைந்துள்ள தே.மு.தி.க தலைமை அலுவலகத்தில் உள்ள மறைந்த விஜயகாந்தின் நினைவிடத்திற்கு சென்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சென்னையில் வசித்துவரும் இலங்கையைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் சண் மாஸ்டர் ஆகியோர் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.இதன்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தொடர்பில் விஜயகாந்த்தின் மனைவி பிரேமலதா தமது நினைவுகளை பகிர்ந்துக் கொண்டுள்ளார். இதன்போது விஜயகாந்தின் மனைவி பிரேமலதா "தலைவர் பிரபாகரன் மீது தனது கணவர் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகவே தமது மகனுக்கு பிரபாகரன் எனப் பெயர் வைத்தார் என்றும், தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுத்து தம்மைத் தாமே ஆளுகின்ற மக்களாக வாழ வேண்டும் என்பதிலும் தனது கணவர் உறுதியாக இருந்துள்ளார்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காரைதீவில்.நினைவேந்தல்



**மறைந்த புரட்சிக்கலைஞர் கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்கு**

**காலம். 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி**

**இடம். ஏற்பாட்டாளர். முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில்**

**நிகழ்வில் கலந்துகொள்ள அனைவரையும் அழைக்கிறோம்**

# இலங்கையில் ஜல்லிக்கட்டு நடத்தி வரலாற்று சாதனை படைத்த செந்தில் தொண்டமான்!



தமிழ் மக்களின் பாரம்பரியத்தையும் வீரத்தையும் பறைசாற்றும் ஜல்லிக்கட்டு இலங்கை வரலாறறில் முதல் முறையாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானின் முயற்சியில் இலங்கையில் நடைபெற்றது. நேற்றையதினம் திருகோணமலை சம்பூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்றது. தமிழருடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழ் நாட்டை தாண்டி வேறு ஒரு நாட்டில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் ரீ முருகன் மற்றும் நடிகர் நந்தா, சிறப்பு விருந்தினர்களாக ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்க தலைவர் ஒண்டிராஜ்,செயலாளர் ராஜா ஆகியோர் கலந்துகொண்டதுடன் இந்தியா உட்பட பல நாடுகளை சேர்ந்த விசேட அழைப்பாளர்களும் கலந்துகொண்டனர். தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்கத்தின் வழிகாட்டலில் ஜல்லிக்கட்டு இடம் பெற்றது.இதன் போது காளைகள் சீறிப்பாய்ந்ததுடன், காளைகளுக்கும் காளைகளை அடக்கிய வீரர் களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டது.












# திருமலை மாவட்டத்தின் தவிர்க்க முடியாத அரசியல் சொத்து எம்.எஸ் தௌபீக்!

## இன்று அவருக்கு 53 வது பிறந்தநாள்!







எஸ். சினீஸ் கான்.

**எவருக்கும் அடிபணியா ஆளுமை,**

எல்லோருக்கும் முன்மாதிரியான முன்னோடி, முஸ்லிம் அரசியல் வாதிகள் சாணக்கியம் நிறைந்த தலைமைத்துவம், வெறும் திண்ணப் பேச்சு நடத்தும் முஸ்லிம் அரசியலிருந்து வேறுபட்டு மக்களுக்கான அரசியலை நடத்தும் சமூகப் போராளி திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் எம். எஸ் தௌபீக்யின் 53 வது பிறந்தநாள் இன்றாகும்.

கிண்ணியா மண்ணில் 1971-01-07ம் திகதி வியாழக்கிழமை முகம்மது சரிப், ஆமீனா தம்பதிகளுக்கு மகனாக தௌபீக் அவர்கள் பிறந்தார்

இவர் தனது பாடசாலைக் கல்வியினை கிண்ணியா முஸ்லிம் மத்திய கல்லூரி, மூதூர் முஸ்லிம் மத்திய கல்லூரிகளில் கற்றார். பிற்பாடு ஆசிரியராக தனது பணியினை சரி வர செய்து மாணவர்கள் மிகவும் நேசிக்கும் ஆசிரியராக காணப்பட்டார்.

**அரசியல் பிரவேசம்.**

சமூகப்பணியில் அதிக ஆர்வம் கொண்ட இவர் மக்கள் பணியாற்றுவதற்காக தான் நேசித்த அரசியல் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் உருவாக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் 2000 ஆம் ஆண்டு இணைந்த எம்.எஸ்.தௌபீக் தனது அரசியல் பயணத்தை ஆரம்பம் செய்தார். இளமையிலிருந்து சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும் இவரது அரசியல் ஆரம்பம் எதிர்பாராத விதமாகவே நடைபெற்றது.

**எதிர்கொண்ட முதல் தேர்தல்.**

தான் எதிர்கொண்ட அறிமுகத் தேர்தலில் போட்டியிட்டு அதில் அமோக வெற்றினை பெற்று நாடாளு மன்றத்திற்கு தெரிவாகி கிண்ணியாவிலே 07 வது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெயரை கிண்ணியா வரலாற்றில் பதித்தார்.

இன்றுவரை 24 வருட அரசியல் வாழ்வில் பாராளுமன்ற உறுப்பினராக, மாகாணசபை உறுப்பினராக பணியாற்றியதுடன் வெற்றி தோல்விகளை கடந்து மக்களுக்காக தன்னை அர்ப்பபணித்துக் கொண்டிருக்கிறார்.

**மக்கள் பணிகள்**

அரசியல் மூலமாக திருகோணமலை மாவட்டத்தில் தன்னால் முடியுமான பல சேவைகளை செய்து தனக்கென ஒரு இடத்தினை பிடித்தார். வீதி அபிவிருத்தி மற்றும் இளைஞர் வேலை வாய்ப்புகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் விஸ்தரிப்புகள் மற்றும் பல பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் விளையாட்டு மைதான புணரமைப்பு என்று பல பணிகளை செய்திருக்கிறார்.

திருகோணமலை மாவட்டத்தில் அளவில்லா சேவைகள் செய்ததன் மூலமாக மக்கள் சேவகன் என்ற பெருமையை தனதாக்கிய எம்.எஸ். தௌபீக் தனது அரசியல் வாழ்க்கையின் மாபெரும் சேவையாக "இலங்கையில் மிக நீளமான பாலத்தினை" சவூதி அரபியாவின் நிதி உதவியுடன் பாலத்தினை கட்டி முடித்து இலங்கையின் நீளமான பாலம் இருக்கும் ஊர் என்ற பெருமையினை எமது கிண்ணியாவுக்கு பெற்றுக் கொடுத்தார் எம்.எஸ்.தௌபீக்.

மனதில் பட்டத்தை நேரே பேசும் குணம், விமர்சணங்கள் ஆயிரம் வந்தாலும் தனக்கு எது சரி என்று தோன்றுகின்றதோ அதனை தைரியமாக செய்யும் வல்லமை, துணிச்சலுடன் பிரச்சினைகளை அணுகி ஆராயும் தன்மை, சவால்களைக் கண்டு பின்வாங்காத ஆளுமை, நிதானமும், அனுபவமும் கொண்ட என்றும் மக்கள் மனதில் வாழும் தலைவனுக்கு இன்றைய பிறந்தநாளில் இறையாசிவேண்டி பிராத்திக்கிறோம்.